வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 13.07.2025** **நேரம் மாலை 6.10 மணி**

தலைப்புச் செய்திகள்

முன்னாள் வெளியுறவு செயலர் திரு ஹர்ஷ்வர்தன் ஷிரிங்கலா, பிரபல வழக்கறிஞர் திரு உஜ்வால் தியோராவ் நிகம், உள்ளிட்ட 4 பேரை மாநிலங்களவை உறுப்பினர்களாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பரிந்துரைத்துள்ளார்.

3 நாள் அரசு முறை பயணமாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சிங்கப்பூர் மற்றும் சீனா சென்றுள்ளார்

பாரம்பரிய மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைக்கும் இந்தியாவின் திட்டத்திற்கு உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது.

புதுச்சேரியில் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த திரு ஏ ஜான்குமார் புதிய அமைச்சராக நாளை பதவி ஏற்றுக்கொள்கிறார்.

திரவுபதி முர்மு 1 (8)

கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவைகளில் சிறந்து விளங்குபவர்களை கௌரவிக்கும் வகையில், மாநிலங்களவைக்கு 12 நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், முன்னாள் வெளியுறவு செயலர் திரு ஹர்ஷ்வர்தன் ஷிரிங்கலா, பிரபல

வழக்கறிஞர் திரு உஜ்வால் தியோராவ் நிகம், சமூக சேவகர் திரு சதானந்தன் மாஸ்டர், வரலாற்று ஆசிரியர் மற்றும் அமிலவியல் நிபுணர் டாக்டர் மீனாட்சி ஜெயின் ஆகியோரை மாநிலங்கவை உறுப்பினர்களான குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பரிந்துரைத்துள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

(வாய்ஸ் )

*திரவுபதி முர்மு* 2 (17)

(வாய்ஸ்)

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்னாள் வெளியுறவு செயலாளர் திரு ஹர்ஷ்வர்தன் ஷிரிங்கலா அமெரிக்கா, பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான தூதராக பணியாற்றியவர் என்றும், கடந்த 2023 ஆம் ஆண்டு இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டிற்கு ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியவர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேபோல், மகாராஷ்டிராவை சேர்ந்த திரு நிகம் மும்பை பயங்கரவாத தாக்குதல் வழக்கில் அரசு வழக்கறிஞராக பணியாற்றியவர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. கேரளாவை சேர்ந்த திரு சதானந்தன் மாஸ்டர் கல்வித் துறையில் நீண்ட காலம் பணியாற்றியவர் என்றும், அரசியல் வன்முறையால் பாதிக்கப்பட்டு அவர் தனது இரு கால்களையும் இழந்தவர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மீனாட்சி ஜெயின் டெல்லி

பல்கலைக்கழகத்தில் வரலாற்று துறையில் இணை பேராசிரியராக பணியாற்றிவர் என்றும், கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவைகளில் பங்களித்தவர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மாநிலங்களவைக்கு நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட இந்த 4 பேருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (17)

3 நாள் அரசு முறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் சீனா சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சிங்கப்பூரில் இன்று அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் திரு விவியன் பாலகிருஷ்ணனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில், இந்தியாவின் கிழக்கு பிராந்திய கொள்கையால் சிங்கப்பூர் ஒரு முக்கியமான நாடு என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் அதிகரித்து வரும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைத்ததாக அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடனான சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு விவியன் பாலகிருஷ்ணன், உலகளாவிய அளவில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதால், இந்தியாவின் பங்களிப்பு இதில் முக்கிய பங்கு வகிக்கிறது என கூறியுள்ளார். தமது சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு மத்திய

வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் சீனாவில் நடைபெறும், ஷாங்காய் ஒத்துழைப்ப நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்க உள்ளார். தொடர்ந்து சீன தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

*மன்சுக் மாண்டவியா* (11)

சைக்கிள் பயணம் மேற்கொள்வதன் மூலம் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படுவது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பயன்கள் ஏற்படுவது மட்டுமல்லாமல், அது ஒரு சிறந்த உடற்பயிற்சி என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன் சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். ஞாயிறுதோறும் சைக்கிள் பயணம் என்ற நிகழ்ச்சி நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியில் குஜராத் மாநிலம் காந்தி நகரில் பிட் இண்டியா இயக்கத்தின் சார்பில் ஞாயிறுதோறும் சைக்கிள் பயணம் என்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார். அப்போது பேசிய அவர், நாடு முழுவதும் 7 ஆயிரம் இடங்களில் இதுவரை நடைபெற்ற சைக்கிள் பயண நிகழ்ச்சியில் இளைஞர்கள் பெருமளவு திரண்டு வந்து பங்கேற்றதாக குறிப்பிட்டார்.

ஆயுர்வேதா (19)

அறுவை சிகிச்சையின் தந்தை என போற்றப்படும் புகழ்மிக்க ஆச்சாரியா சுஷ்ருதாவை நினைவுகூறும் வகையில் அவரது பிறந்த தினத்தை முன்னிட்டு, புதுடெல்லியில் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் 3 நாள் தேசிய கருத்தரங்கு இன்று தொடங்கியது. ஷாலியாகாம் என அழைக்கப்படும் இக்கருத்தரங்கில் பொது அறுவை சிகிச்சைகள், ஆசன வாய் அறுவை சிகிச்சைகள் மற்றும் சிறுநீர் அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட நேரடி அறுவை சிகிச்சைகள் இடம் பெறும். முதல் நாளான இன்று 10 பொது என்டோஸ்கோப்பிக், லேப்ராஸ்கோப்பிக் அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. 2 வது நாளில் 16 அணோ ரெக்டல் அறுவை சிகிச்சைகள் நேரடியாக மேற்கொள்ளப்படுகிறது. பங்கேற்பாளர்கள் கவனித்துக் கொள்ள வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இறுதி நாளான வரும் 15 ம் தேதி 200 க்கும் மேற்பட்ட வாய்வழி மற்றும் சுவரொட்டி விளக்க காட்சிகளும் இடம் பெற உள்ளன. இதனை சார்ந்த அறிவுசார் உரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன. புதுமை, ஒருங்கிணைப்பு மற்றும் உத்வேகம் ஆகியவற்றை மையமாக கொண்டு இந்த ஷாலியாகான் கருத்தரங்கு நடைபெறுகிறது. இந்த கருத்தரங்கில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து 500 க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற அறிஞர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

*பாரம்பரிய மருத்துவம்-செயற்கை நுண்ணறிவு* (12)

பாரம்பரிய மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைக்கும் இந்தியாவின் திட்டத்திற்கு உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தியாவின் பாரம்பரிய மருத்துவத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் மத்திய ஆயுஷ் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. பாரம்பரிய மருத்துவத்தில் துல்லியமான கணக்கீடுகளை மேற்கொள்ள செயற்கை நுண்ணறிவு திட்டத்தையும் ஆயுஷ் அமைச்சகம் வடிவமைத்துள்ளது. இந்தியாவின் இந்த முதன் முறை தொழில்நுட்ப முயற்சிக்கு உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது. ஆயுர்வேதம், சித்தா, யுனானி, சோவா, ரிக்பா, ஹோமியோபதி போன்ற பாரம்பரிய மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைக்கும் இந்த முயற்சி இந்தியாவின் தொழில்நுட்ப அறிவை முன்னெடுத்து செல்வதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

*சட்டப்பேரவை தலைவர்* (12)

புதுச்சேரியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் திரு தீப்பாய்ந்தான், திரு ராஜசேகரன், திரு செல்வம் ஆகிய மூன்று பேரை நியமன சட்டமன்ற உறுப்பினர்களாக மத்திய உள்துறை அமைச்சகம் நியமித்து அதற்கான அனுமதி வழங்கி உள்ளதாக சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் தெரிவித்துள்ளார். புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நியமன சட்டமன்ற உறுப்பினர்கள் நாளை நண்பகல் 12.30

மணியளவில் சட்டமன்ற வளாகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பதவி ஏற்க உள்ளதாக தெரிவித்தார். அதேபோல் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த திரு ஏ ஜான்குமாரும், அமைச்சராக நாளை பதவி ஏற்க உள்ளதாக அவர் தெரிவித்தார். அவருக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்த வைக்க உள்ளதாக சட்டப்பேரவை தலைவர் கூறினார். இது குறித்து மேலும் அவர் கூறுகையில்........

(வாய்ஸ்)

சுபான்ஷு (6)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 14 நாட்களாக ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டு வரும் இந்திய விண்வெளி வீரர் குழு கேப்டன் சுபான்ஷு சுக்லா மற்றும் அவரது சக விண்வெளி வீரர்கள் குழு உறுப்பினர்களின் பூமி திரும்பும் பயணம் நாளை மாலை தொடங்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

*நிதிஷ்குமார் (17)*

மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு நிதிஷ்குமார் இன்று காரைக்கால் மாவட்டத்திற்கு சென்று, காரைக்கால் மாவட்டத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். குறிப்பாக, மத்திய அரசின் பிரதமர் மீன் வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், காரைக்காலில் 130 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் மீன்பிடி துறைமுக விரிவாக்க பணிகள் குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார். மீன்பிடி விரிவாக்க திட்ட அம்சங்களாக செயற்கை நுண்ணறிவு மூலம் அனைத்து தகவல்களும் சேகரிக்கப்பட உள்ளது. மேலும், காரைக்கால் மாவட்டம் ஆன்மீக தலமாக உள்ளதால் அதனை முக்கிய சுற்றுலா தலமாக மேம்படுத்த மத்திய அரசின் பிரசாத் திட்டத்தின் கீழ், 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பக்தர்கள் தங்குமிடம், 300 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் கூடிய பல அடுக்குகள் கொண்ட கார் பார்க்கிங் போன்றவற்றையும் அவர் ஆய்வு செய்தார். இந்த ஆலோசனை கூட்டத்தில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன். துணை நிலை ஆளுநரின் செயலர் திரு மணிகண்டன், மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சௌஜன்யா, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*ராஜ்நாத் சிங்* (7)

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையில் இராணுவ வீராங்கனைகளின் பங்கு மகத்தானது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய வளாகத்தை திறந்து வைத்து பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்திய ராணுவ படைகளின் வீராங்கனைகளின் பங்களிப்பால் பாகிஸ்தானில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

*இலங்கை வீடு* (5)

இந்தியாவின் நிதியுதவியுடன் இலங்கையின் அனுராதபுரத்தில் தமிழர்களுக்காக கட்டப்பட்டுள்ள 90 புதிய வீடுகளை இலங்கை பிரதமர் ஹரினி அமரசூர்யா, இந்திய தூதருடன் இணைந்து திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இலங்கைக்கு இந்தியா அளித்து வரும் நிதியுதவி திட்டங்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

*மீனவர் கைது* (6)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, ராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படையினர் நடுக் கடலில் கைது செய்துள்ளனர்.

பின்னர் அவர்கள் காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணைக்கு பின்னர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். மீனவர்கள் நீதிமன்ற விசாரணைக்கு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இரங்கல் (6)

மூத்த தெலுங்கு நடிகர் கோட்டா ஸ்ரீனிவாச ராவ் இன்று காலை ஐதராபாத்தில் உள்ள தனது இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 83. அவரது மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார். அவர் தமது செய்தியில், கோட்டா ஸ்ரீனிவாச ராவ் தனது நடிப்பின் மூலம் பார்வையாளர்களை கவர்ந்ததாகவும், சமூக சேவையில் முன்னணியில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.